சித்திரை 08, 2010

## 1990 முதல் 2009 வரை அட்டைகளின் (புலிகளின்) ஆட்சியில்......

### *நடந்த வன்கொடுமைகள்! (பகுதி 30)*

(கிறேசியன், நாவாந்துறை)

சிறிது நேரத்தில் ஈ.பி.ஆர்.எல்.எப் தோழரது முகத்தில் துணியைப் போட்டனர். மஞ்சு அவரது நெஞ்சில் ஒரு காலை வைத்து மிதித்தார். சின்னக் கேடியும் தனது வலது காலால் அவரது வயிற்றில் மிதித்தார். வேறொருவர் அவரது தலைப் பகுதியில் இருந்து கொண்டு இரண்டு கைகளாலும் அவரது நாடியைப் பிடித்து தன்னை நோக்கி இழுத்தார். கௌதமன் போத்தலில் இருந்த தண்ணீரை அவரது மூக்கின் மேல் ஊற்றினார். அவர் திணறினார். கால்களை இழுத்தார். மூக்கு வழியாக சத்தம் வந்தது. தலைப் பகுதியிலிருந்தவர் கைகளை எடுத்து அவரது கன்னத்தில் இரண்டு கைகளாலும் அறைந்தார். சத்தம் போடாமல் இரடா என்றார். ஆட்டாமல் இரடா என்றார். டே, இவன்ர கால் சங்கிலி லூசா இருக்கடா! கயித்தால இழுத்து பிக்காசில கட்டடா என்று கௌதமன் கத்தினார்.

இரண்டு புலிகள் அலுவலகத்துக்கு ஓடிப்போய் இரண்டு கயிற்றுடன் வந்தனர். அவரது காலை பிக்காசுடன் இணைத்துக் கட்டினார்கள். இவை நடந்து கொண்டு இருக்கும் போது அவர் என்னைத் திரும்பிப் பார்த்தார். அவருக்கு எப்படியான ஆறுதலைக் கூற முடியும் என்று யோசித்தேன். வாயைத் திறந்து எதுவும் சொல்ல முடியாது. கைகள் பிக்காசுடன் பிணைக்கப்பட்டிருந்தன. வெறும் கண்களால் எதனைச் சொல்லமுடியும்? கண்களால் வானத்தைக் காண்பித்தேன். கடவுள்தான் காப்பாற்ற

**உனக்கு நாடு இல்லை என்றவனைவிட நமக்கு நாடே இல்லை என்றவனால்தான் நான் எனது நாட்டை விட்டு விரட்டப்பட்டேன்.......**



ராஜினி திரணகம
MBBS(Srilanka)
Phd(Liverpool, UK)

**“அதிர்ச்சி ஏற்படுத்தும் சாமர்த்தியம் விடுதலைப்புலிகளின் வலிமை மிகுந்த ஆயுதமாகும்.** விடுதலைப்புலிகளுடன் நட்பு பூணுவது என்பது வினோதமான சுய தம்பட்டம் அடிக்கும் விவகாரமே. விடுதலைப்புலிகளின் அழைப்பிற்கு உடனே செவிமடுத்து, மாதக்கணக்கில்

ஈழச் சுவர்
தமிழ் நியூஸ் வெப்
பத்மநாபா
மலையகம்
பார்வை
அலை
தாயகம்
ஈழநாசம்
நெருப்பு
அதிரடி
அதிரடி மீடியா
ஈ.பி.ஆர்.எல்.எவ்.
ஆனந்தசங்கரி
விழிப்பு
ரெலோ நியூஸ்
உதயம்
தேனகம்
புளொட்
ஈபிஆர்எல்எவ் வெப்
விடிவெள்ளி
எங்கள் பூமி
இலங்கை கம்யூனிஸ்ட்
எங்களைப்பற்றி
General

வேண்டும் என்று நான் நினைத்துக் கொண்டதை அவரும் புரிந்துகொள்வார் என்று நானே எனக்குள் நினைத்தக் கொண்டேன்! அவரது உச்சந்தலை நிலத்தில் படுமளவுக்கு கழுத்துத் தாடையையும் சேர்ந்து ஒருவர் இழுத்துப் பிடிக்க தண்ணீரை ஊற்றினார் அவரது மூக்கினுள்.

சொல்லடா சி.வி.எப். க்கு குடுத்த ஆம்ஸ் எல்லாம் எங்கேடா வைச்சிருக்கிறாய்? பிரேமச்சந்திரனுக்கும், பெருமாளுக்கும் என்னடா தொடர்பு? அடிச்ச காசெல்லாம் எங்கடா வச்சிருக்கிறாய்? வயிற்றில் உதைப்பவரும் கேட்கிறார், நெஞ்சில் மிதிப்பவரும் கேட்கிறார், கழுத்தைப் பிடிப்பவரும் கேட்கிறார் ஆனால் அவரால்தான் பதில் சொல்ல முடியாது. வாயைத் திறக்க முடியாமல் தலைப் பதியிலிருநது எனக்கு இழுத்தது போன்று அவரையும் இழுத்துக் கொண்டிருக்கிறார் இன்னுமொருவர். என்னைச் சித்திரவதை செய்யும் போது பேசப்பட்ட தூசண வார்த்தைகளை விட அதிகமான வார்த்தைகளை மிகவும் தாராளமாகவே பயன்படுத்தினர்.

அவர் திணறும் சத்தம் மிகவும் அதிகமாக கேட்டது. சின்னக் கேடி சொன்னார் “டே இவன் கத்துகிறது வெளியில் இருக்கிற ஆக்களுக்கு கேக்கப் போகுது. துண்டைப் போட்டு அமத்துங்கடா” என்றார். மூச்சு விட முடியாத அவர் எழுப்பும் ஒலி வெளியில் இருக்கும் ஒருவரது காதில் விழுந்தால் யாரோ ஒரு மனிதனது கழுத்தை புலிகள் வெட்டுகின்றனர் என்று நினைக்கத் தோன்றும். இதைப் பார்க்க முடியாமல் நான் சிலவேளை கண்களை மூடினேன். அப்போது எனக்கும் அது போன்ற ஓர் எண்ணம்தான் தோன்றியது. நானும் அப்படித்தான் சத்தமிட்டிருப்பேன் என்று எனக்கு அப்போதுதான் தோன்றியது! ஜேசுநாதரை சிலுவையில் அறைந்து ஈட்டியால் குத்தினார்கள். இவர்கள் விலங்கு போட்டு படுக்கவைத்து பலபேர் சேர்ந்து ஏறி மிதித்துக் கொல்லப்பார்க்கிறார்கள்.

எனக்கு இடைவேளை விட்டது போன்று இவருக்கும் இடைவேளை விட்டனர். அந்த இடைவேளையில் கேட்டனர் சொல்லடா என்று. அவரும் எனக்கு எதுவும் தெரியாது, ஆயுதங்களை எங்கே புதைத்தனர் என்று யாரும் எனக்குச் சொல்லவில்லை. அப்படி எனக்குத் தெரிந்தால் நான் எடுத்துக் கொடுத்துவிடுவேன். அதை வைத்துக்கொண்டு நான் என்ன செய்ய முடியும்? என்று அவர்களிடத்தில் கேட்டார்.

“டே பார்டா இவனுக்கு சரியான திமிர்! இவனை விடக்கூடாது, இவனைக் கொல்லத்தான் வேணும்” என்று கத்தினார் மஞ்சு! இரண்டு நிமிடங்களில் மீண்டும் ஆரம்பித்தனர் தங்களது தலையாயக் கடமையை! ஈ.பி.ஆர்.எல்.எப். தோழர் ஏறக்குறைய ஆறு அடி உயரம் இருப்பார். நல்ல உடல் கட்டமைப்புக் கொண்டவர். கண்கள் பிரபாகரனது கண்களை விடவும் பெரிதானது! அதிகமாக

அவர்களின் குழுக்களில் இருந்து ஆலோசனை வழங்கி, கடிதங்கள் வரைந்து, கூட்டங்களில் பேசித்திரிந்து, அவர்களுக்கு அடிவருடிகளாக இருந்தவர்கள்மீது கூட சூசகமான எச்சரிக்கைகள், காலப்போக்கில் அவர்கள்மீது சந்தேகம் கொண்டு விடப்பட்டன………”

(முறிந்த பனை நூலில் இருந்து)

(இந் நூலை எழுதிய ராஜினி திரணகம விடுதலைப் புலிகளின் புலனாய்வுப் பிரிவின் முக்கிய உறுப்பினரான பொஸ்கோ என்பவரால் 21-9-1989 அன்று யாழ் பல்கலைக்கழக வாசலில் வைத்து சுட்டு கொல்லப்பட்டார்)

Its capacity to shock was one of theL.T.T.E'smost potent weapons. Friendship with theL.T.T.E. was a strange and self-flattering affair.In the course of the coming days dire hints were dropped for the benefit of several old friends who had for months sat on committees, given advice, drafted latters, addressed meetings and had placed themselves at the L.T.T.E.'s beck and call.

From: Broken Palmyra

***இலங்கையின் 7 வது பாராளுமன்றத் தேர்தல்!***
**நடக்கும் என்றார் நடந்து விட்டது! நடக்காது என்றார் இனி நடந்துவிடுமா?**

(சாகரன்)

யாருடனும் கதைக்க மாட்டார். அவரது குடும்பத்தை நினைத்தோ அல்லது வேறு உறவுகளை நினைத்தோ அவர் கண்கள் கலங்கியதை அந்தச் சிறையில் இருந்த நாட்களில் நான் பார்த்திருக்கிறேன். மிகவும் அமைதியான மனிதர் அவர்.

அப்படியான ஒருவரை மல்லாக்கப் போட்டு நார் உரிக்கின்றனர் புலி விலங்குகள். சித்திர வதையைத் தாங்கிக்கொள்ளலாம். ஆனால் சித்திரவதைப் பார்த்துக்கொண்டு இருக்க எந்த மனிதனாலும் முடியாது. புலிகள் இவற்றுக்கு விதி விலக்கான விலங்குகளாயினர். தமிழ் இனம் மரணத்தையா விடுதலையாகக் கோரினார்கள்? விடுதலையை நேசிக்கும் எவனும் மனிதனுக்கான உரிமைகளை மீற மாட்டான். எனவே இவர்களுக்கு விடுதலை அல்ல நோக்கம் என்பது இவர்களது கொடுஞ் செயல் மூலம் அறியக்கூடியதாக இருந்தது.

அந்தத் தோழர் அலறுகிறார் ஒலி வரவில்லை, அதனுடைய சத்தம் கேட்கிறது. மரணப் பகுதிக்குச் சென்று மீண்டும் வருகிறார். இவர்கள் தடிகளால் அடிக்கின்றனர், கால்களால் உதைக்கின்றனர், கைகளால் குத்துகின்றனர் அடிக்கின்றனர் மூச்சை நிறுத்த துணிபோட்டுத் தண்ணீர் ஊற்றுகின்றனர். சின்னக்கேடி கத்துகிறார் "டே அந்தக் கட்டையை எடுத்துக் கொண்டு வாடா" என்று அந்த வளவின் மூலையில் கிடந்த மரக்கட்டையைக் காண்பிக்கிறார். ஒரு புலி ஓடிச்சென்று அந்த மரக்கட்டையை எடுத்து வருகிறார். அந்த மரக்கட்டை ஒரு முக்கால் அடி விட்டங்கொண்டது. நீளம் நான்கு அடிகள் இருக்கும்.

"அந்தக் கட்டையை அவன்ர கழுத்துக்குக் கீழே போற்றா" என்றார். தலையைத் தூக்கி கழுத்தின் கீழ் வைத்தார் கட்டையை! இப்ப தலையைக் கீழே அமத்தடா என்றார் சின்னக் கேடி! இப்போது அவரது மூக்கு வானத்தை நோக்கிக் கொண்டிருந்தது. போற்றா துண்டை என்றார். போட்டனர் சிறிய விலங்குகள்! கௌதமன் ஊற்றினார் தண்ணீரை! சின்னக் கேடிக்கு இதன் மூலம் பெருமை சேர்ந்தது! ஏனைய விலங்குகள் யோசிக்காத இந்த யுக்தியை சின்னக்கேடி யோசித்துக் கண்டுபிடித்து சகாக்களுக்கு வெளிப்படுத்தி ஓர் புதிய உற்சாகத்தை ஏற்படுத்தினார். அந்தச் சமூக விஞ்ஞானி!

ஒரு தடவை தண்ணீர் ஊற்றுவதில் தாமதம் ஏற்பட்டது. அப்போது அவர் சொன்னார், "தெரியும் சொல்கிறேன்" என்று. உடனே அனைவரும் அவரது தலைப்பகுதியில் ஒன்று கூடினர். முகத்தில் போட்டிருந்த துணியை எடுத்தனர். ஆ! சொல்லு சொல்லு! என்று கேட்டனர். அவர் மூச்சை வெளியில் விட்டு மீண்டும் பலமாக உள்ளே இழுத்தார். அனைவரையும் உற்றுப்பார்த்தார். உமிழ் நீரை விழுங்கினார். நீங்கள் இப்படிச் செய்வதைத் தாங்க முடியாமல்தான் சொன்னேன். உண்மையில் எனக்குத்


**வெல்லப்போவது யார்.....? பாராளுமன்றத் தேர்தல் 2010**

(சாகரன்)

***பாராளுமன்றத் தேர்தல் 2010***

**தேர்தல் விஞ்ஞாபனம்**

***- பத்மநாபா ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி***

**1990 முதல் 2009 வரை அட்டைகளின் (புலிகளின்) ஆட்சியில்......**

***நடந்த வன்கொடுமைகள்!***
(கிறேசியன், நாவாந்துறை)

***சமரனின் ஒரு கைதியின் வரலாறு***

***"ஆயுதங்கள் மேல் காதல் கொண்ட மனநோயாளிகள்."***
**வெகு விரைவில்...**

**மீசை வைச்ச சிங்களவனும் ஆசை வைச்ச தமிழனும்**

(சாகரன்)

***இலங்கையில்***

**'இராணுவ' ஆட்சி வேண்டி நிற்கும் மேற்குலகம், துணை செய்யக் காத்திருக்கும் சரத் பொன்சேகா கூட்டம்**

(சாகரன்)

***ஜனாதிபதி தேர்தல்***

**எமது தெரிவு எவ்வாறு அமைய வேண்டும்?**

-பத்மநாபா ஈபிஆர்எல்எவ்

***ஜனாதிபதித் தேர்தல்***

**ஆணை இட்ட அதிபர் 'கை', வேட்டு வைத்த**

தெரியாது. தெரிந்தால் நான் சொல்லிவிடுவேன் என்றார்.

மஞ்சு அவரது முகத்தில் காலால் அடித்தார். அம்மா என்று கத்தினார் அவர். இப்போது மட்டும்தான் அவர் அம்மா என்று கத்த முடிந்தது. ஏனைய நேரங்களில் அவரது நாடியைப் பிடித்து தலைப்பகுதியில் இருப்பவர் இழுத்துக் கொண்டே இருந்தார். அதனால் வாயைத் திறக்க முடியவில்லை! வாயைத் திறப்பதற்கான சந்தர்பம் கிடைத்ததும் தனது வலியினைத் தாங்கிக் கொள்ள "அம்மா" என்று அலறினார்.

முதலில் எங்களைப் பிக்காசில் பூட்டும் போது அந்த இடத்தில் நிழல் இருந்தது. இப்போது நாங்கள் பிணைக்கப்பட்ட இடத்தில் வெய்யில் தெறிக்கிறது. எனது முகம் வயிற்றுப்பகுதி எல்லாம் காய்ந்து விட்டது. முதுகுப் பகுதியில் மட்டும் ஈரம் ஊறிக் கொண்டே இருந்தது. மீண்டும் ஆலோசித்தனர் புலிகள். எனது முகத்தில் போட்டது போன்ற துணி ஒன்றினை எடுத்துவந்து அதை நனைத்தனர். நனைந்த துணியை அவரது வாயினுள் திணித்தனர். பின்னர் மற்றைய துணியினால் அவரது வாயைக் கட்டினர். இப்போது கட்டையின் மேற்பகுதியில் கழுத்தை மீண்டும் வைத்து தலை மயிரைப் பிடித்து கீழ் நோக்கி அமத்திக் கொண்டு தண்ணீரை ஊற்றினர். அவர் மூச்சை வெளியேற்றி மூக்கினுள் சென்ற தண்ணீரை சீறி வெளியேற்றினார். உடனே போற்றா துண்டை என்றனர். துண்டு அங்கு இருக்கவில்லை. ஒரு புலி ஓடிச் சென்று மீண்டும் ஒரு துண்டைக் கொண்டு வந்து முகத்தில் போட்டார்.

"ஊத்தடா தண்ணீயை" என்றார் கௌதமன். அவர் மூச்சை உள்ளே இழுக்கவில்லை. தம்பிடித்துக் கொண்டிருந்தார். அப்போது வாசலில் காவலுக்கு நின்ற ஒரு புலி ஓடிவந்து கௌதமனிடம் ஏதோ சொன்னார். கௌதமன் மஞ்சுவைப் பார்த்து நிறுத்தும்படி சைகை செய்தார். அனைவரும் நிறுத்தினர் தங்களது நற்பணியினை.

யாரோ பொதுமக்களில் சிலர் இவர்களது வாசலுக்கு வந்து, "நீங்கள் யாரையோ கொல்வது போன்ற சத்தம் வெளியில் கேட்கிறது. ஏன் இப்படிச் செய்கிறீர்கள் என்று கேட்டுள்ளனர். இதைக் கவனித்த வேறு ஒரு புலி ஓடிவந்து இந்தத் தகவலைச் சொன்னார் கௌதமனிடம். அதனால்தான் நிறுத்தச் சொன்னார் கௌதமன். இப்போது நேரம் ஒரு மணிக்கும் மேலாக இருக்கும். கௌதமன் சொன்னார், "ரெண்டுபேரையும் பேசுக்கு கொண்டு போங்க, பின்னேரம் சொல்லிறன்" என்றார்.

அவருக்கு வாய்கட்டு அவிழ்க்கப்பட்டது. பின்னர் எனது பிக்காஸ் விலங்குகளையும் அவரது பிக்காஸ் விலங்குகளையும் கழற்றினர். என்னால் எழுந்திருக்க முடியவில்லை. முகத்தைக் குப்பறத் திருப்பி


**ஜெனரல் 'துப்பாக்கி' ….. யார் வெல்வார்கள்?**

(சாகரன்)

**சம்பந்தரே! உங்களிடம் சில சந்தேகங்கள்.**

(சேகர்)

**அனைத்து இலங்கைத் தமிழர்களும் ஒற்றுமையான இலங்கை தமது தாயகம் என மனப்பூர்வமாக உரிமையோடு உணரும் நிலை ஏற்பட வேண்டும்.**

(அ. வரதராஜப்பெருமாள்)

***தொடரும் 60 வருடகால காட்டிக் கொடுப்பு***

**ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் பாடம் புகட்டுவார்களா?**

(சாகரன்)

***ஜனவரி இருபத்தாறு!***

**விரும்பியோ விரும்பாமலோ இரு கட்சிகளுக்குள் ஒன்றை தமிழ் பேசும் மக்கள் தேர்ந்தெடுக்க வேண்டும்…..?**

(மோகன்)

**2009 விடைபெறுகின்றது! 2010 வரவேற்கின்றது!!**

***'ஈழத் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் பாசிசத்தின் உதிர்வும், ஜனநாயகத்தின் எழுச்சியும்'***

(சாகரன்)

***சபாஷ் சரியான போட்டி.***

**மகிந்த ராஜபக்ஷ Vs சரத் பொன்சேகா.**

(யஹியா வாஸித்)

**கூத்தமைப்பு**

முழங்காலை மண்ணில் ஊன்றி கைகளால் நிலத்தை ஊண்றிக்கொண்டு மெதுவாக எழுந்தேன். சறத்தைச் சரிசெய்து உடுத்தினேன். அது பாதி ஓட்டையான சறம். விதையில் வலி ஏற்பட்டது. விதை வீக்கமடைந்தும் இருந்தது. நெஞ்சுவலி தாங்க முடியாமல் இருந்தது. கீழே படுத்திருக்கும் போது வலி தெரியவில்லை. எழுந்து நிற்கும் போது அனைத்து இடங்களிலும் வலி வறுத்து எடுத்தது.

கால்கள் கண்டல் பட்டிருந்தன. கால் விலங்கில் போடப்பட்டிருந்த பூட்டு காலின் மொளியில் பட்டு இரத்தம் வடிந்திருந்தது. கால் விலங்குடன் என்னால் நடக்க முடியவில்லை. நின்று கொண்டிருந்தேன், ஒரு புலி எனது முதுகில் பிடித்து போடா என்று சொல்லித் தள்ளினார். பொத்தென முன்புறம் விழுந்தேன். திரும்பவும் பழைய மாதிரியே எழுந்தேன். எப்படியும் நானாக நடந்துதான் எனது இருப்பிடத்துக்குச் செல்லவேண்டும். எனக்கென்ன உதவியா செய்யப்போகிறார்கள்!

எனவே அனைத்து விதமான வலிகளையும் தாங்கிக் கொண்டு எழுந்து நடந்தேன். நடை என்றால் முக்கால் அடி தூரத்துக்குத்தான் ஒரு காலை எடுத்து வைக்க முடியும். இப்படியே அந்தப் பாதையை அளந்து கொண்டு சென்றேன் எனது இருப்பிடத்துக்கு. இதே போன்று ஈ.பி.ஆர்.எல்.எப். தோழரும் பின் தொடர்ந்தார். உள்ளே சென்றதும் புலி விலங்குகள் தங்கள் உணவுக்காகச் சென்றுவிட்டனர். எங்களுக்கு உணவுப் பார்சல் தரப்பட்டது. நாங்கள் உணவு உண்ணக்கூடிய நிலையில் இருக்கவில்லை. எனது உடலிலும், அந்தத் தோழரது உடலிலும் செம்பாட்டு மண்ணும் நீரும் பட்டு எங்களது நிறத்தை மாற்றியிருந்தது.

கூட இருந்த சகோதரர்கள் எங்கள் உடலிலிருந்த மண்ணைத் தட்டிச் சுத்தம் செய்தனர். நடராஜ் அவர்களும் தவழ்ந்து வந்து எனக்கு ஆறுதல் கூறினார். "இவங்கள் மனுசர்களே இல்லை. புலி என்று பேரை வச்சவன் எப்படி மனுசனாக முடியும்? இவங்கள் நலலா இருக்கவே மாட்டாங்கள். நாசமாய் போவாங்கள். இவங்கள் யாருக்குமே நல்ல சாவு வராது! நான் சொலலிறன் தம்பி, நீ பார். என்ர கண்முன்னால இவங்கள் நாசமா போவாங்கள்! என்று தனது அறிவில் பட்ட அத்தனை அழிவுச் சொற்களையும் சொல்லி புலிகளைத் திட்டினார்.

நடராஜ் அவர்கள் மீண்டும் முன் கதவடிக்குச் சென்று புலிகளின் காவலாளிகளைப் பார்த்து நாசமாப் போவீங்கடா! உங்களை எல்லாம் கொல்லுறததுக்கு யாராவது வருவாங்கடா. நீங்க எல்லாம் அம்மாமாருக்கு பிறக்கேல்லடா! அப்படிப் பிறந்திருந்தால் ஒரு பிள்ள பற்ற கஸ்ரம் தெரிஞ்சிருக்குமேடா! என்று அவர்களைப் பார்த்துப் பேசியதும், அவர்களில் இருவர் இரண்டு தடிகளை எடுத்து வந்து நடராஜ் அவர்களை அடிக்க ஆரம்பித்தனர்.


**கூத்தாடிகளும் மாற்று தமிழ் அரசியல் தலைமைகளும்!**

(சதா. ஜீ.)

***தமிழ் பேசும் மக்களின் புதிய அரசியல் தலைமை***

**மீண்டும் திரும்பும் 35 வருடகால அரசியல் சுழற்சி! தமிழ் பேசும் மக்களுக்கு விடிவு கிட்டுமா?**

(சாகரன்)

**கப்பலோட்டிய தமிழனும், அகதி (கப்பல்) தமிழனும்**

(சாகரன்)

*சூரிச் மகாநாடு*

**(பூட்டிய) இருட்டு அறையில் கறுப்பு பூனையை தேடும் முயற்சி**

(சாகரன்)

**பிரிவோம்! சந்திப்போம்!! மீண்டும் சந்திப்போம்! பிரிவோம்!!**

(மோகன்)

***தமிழ் தேசிய கூட்டமைப்புடன் உறவு***

**பாம்புக்கு பால் வார்க்கும் பழிச் செயல்**

(சாகரன்)

**இலங்கை அரசின் முதல் கோணல் முற்றும் கோணலாக மாறும் அபாயம்**

சாகரன்

**ஈழ விடுலைப் போராட்டமும், ஊடகத்துறை தர்மமும்** - சாகரன்

***அடுத்த கட்டமான அதிகாரப்பகிர்வு முன்னேற்றமானது 13வது***

தம்பி அவரை அடிக்க வேண்டாம், அவருக்கு மூளை சுகமில்லை, அடிக்க வேண்டாம் என்று அவர்களிடம் கேட்டேன். இவனுக்கா மூளை சுகம் இல்லை என்று சொல்கிறாய்? இவனைக் கொல்லவேண்டும் என்று கூறி அடித்தனர் நடராஜ் அவர்களை. அவரோ கீழே கிடந்து உருண்டு உருண்டு அடிவாங்கிக் கொண்டு, டே சனியனே, மூதேவி, ஏன்ரா அடிக்கிறாய் என்று கேட்டுக்கொண்டே இருந்தார். அடித்து முடிந்து வெறுப்படைந்து வெளியேறினர் அந்த இருவரும்.

எனது அறையிலிருந்த ராஜா (மட்டக்களப்பு) என்பவர், அங்கு அப்போது வின்ரோஜன் இல்லாததால் தண்ணீர் போட்டுத் தேய்த்தார். மார்பு, வயிறு, தொடை, சங்கிலி விலங்கு பட்ட இடங்கள் என்று அனைத்தை இடங்களிலும் தேய்த்து தடவி விட்டார். என்னை அறியாமல் உறங்கி விட்டேன்.

மாலை நான்கு மணியளவில் மீண்டும் வந்தனர் அதே சித்திரவதைக் கூட்டம்.

(தொடரும்…)

*திருத்தத்திலிருந்து முன்னோக்கி உந்திப் பாயும் ஒரு விடயமே*

- அ.வரதராஜப்பெருமாள்

***மலையகம் தந்த பாடம்***

**வடக்கு கிழக்கு மக்கள் கற்றுக்கொள்வார்களா?** - சாகரன்

*ஒரு பிரளயம் கடந்து ஒரு யுகம் முடிந்தது போல் சம்பவங்கள் நடந்து முடிந்துள்ளன.!* - அ.வரதராஜப்பெருமாள்

**அமைதி சமாதானம் ஜனநாயகம்**
www.sooddram.com